

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், செய்யூர் அடுத்த இடைக்கழி நாடு பேரூராட்சிக்குட்பட்ட கடப்பாக்கத்தில் இருந்து கல்பாக்கத்திற்கு புதிய வழித்தடப் பேருந்தை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பேருந்து போக்குவரத்தை தொடங்கி வைத்தார். உடன் பனையூர் பாபு எம்.எல்.ஏ., பேரூராட்சி தலைவர் சம்யுக்தா, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் சூ.க.ஆதவன், பேரூர் செயலாளர் மோகன்தாஸ், மாவட்ட அவைத் தலைவர் இனியரசு, ஒன்றிய செயலாளர் சிற்றரசு, மீனவர் அணி அமைப்பாளர் பாரத், ஒன்றிய துணை செயலாளர் ரஞ்சித் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

கோடை விடுமுறையையொட்டி

# ஏற்காட்டில் சுற்றுலா பயணிகள் கூட்டம்!

ஏற்காடு,மே 15 –

கோடை விடுமுறையை யொட்டி, குடும்பத்துடன் பொதுமக்கள் சுற்றுலா தலங்களுக்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

சேலம் மாவட்டம் ஏற்காட்டுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வந்திருந்தனர். இதனால் தாவரவியல் பூங்கா, பக்கோடா பாய்ண்ட், அண்ணா பூங்கா, மான் பூங்கா, லேடீஸ் சீட், ஜென்ஸ் சீட் உள்ளிட்ட பகுதிகளில் சுற்றுலா பயணிகள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

இங்கு பல்வேறு விளையாட்டு பொழுதுபோக்கு அம்சங்கள் உள்ளன. இதனால் இங்குள்ள ஊஞ்சல்கள், சறுக்குகள் உள்ளிட்டவைகளில் சிறுவர், சிறுமிகள் விளையாடி மகிழ்ந்தனர்.

ஏற்காடு ஏரியில் குவிந்த சுற்றுலா பயணிகள் குடும்பத்தோடு படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். இதனால், படகு குலாம் களை கட்டியது. குழுவாக வந்திருந்த பயணிகள் மேற்கூரையுடன் கூடிய மோட்டார் படகுகளில் குதூகலமாக சவாரி செய்தனர். மேலும், மிதி படகு, பெடல் படகுகளில் பயணிக்க ஆர்வத்துடன் காத்திருந்து, சவாரி செய்து மகிழ்ந்தனர்.

கோடை விழாவை யொட்டி ஆண்டுதோறும் மே மாதத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் மலர் கண்காட்சி நடத்தப்படுவது வழக்கம். கண்காட்சியை காண பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் இந்த பூங்காவிற்கு வந்து செல்வது வழக்கம். இது மட்டுமின்றி உள்ளூர் மக்களின் முக்கிய பொழுதுபோக்கு அம்சமாக அண்ணா பூங்கா விளங்கி வருகிறது. மே மாதம் நடைபெறும் கோடை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான மலர் கண்காட்சிக்கு பூங்காவை தயார்படுத்தும் பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகிறது. இதற்காக பூங்காவில் உள்ள இருக்கைகள், ஊஞ்சல்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் என அனைத்திலும் தொழிலாளர்கள் வர்ணம் பூசும் பணியில் ஈடுபட்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பட்டிமன்ற பொதுக்கூட்டம் ஒன்றியச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் மேட்டுப்பாளையம் பஜார் பகுதியில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றினார். பட்டிமன்ற நடுவர் கவிஞர் நந்தலாலா அரசின் சாதனைகளை விளக்கிப் பேசினார். இதில் மாநில மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், மு.கதிரவன், எஸ். ரமேஷ், வெங்டாலபதி, ரவிக்குமார், தமிழஉதயன், ருக்குமணி மோகன்ராஜ், முத்து, நீதி, கோதண்டம், ஜி.பி.வெங்கடேசன், நக்கீரன், ஜெகதீசன், தன்சீங், அருள், முனுசாமி, ஆ.ராஜா, பா.து.தமிழரசன், மோகனசுந்தரம், எம்.டி.ஜி.கதிர்வேல், செல்வமணி, தசரதன், இந்திரா சங்கர், ஏ.எம்.ஆர். முரளி, பாளையம், தாஸ், ரவிச்சந்திரன், ப.தமிழரசன், விக்னேஷ் உதயன், உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் பங்கேற்பு! நாகை ஒன்றியம் –

# ஐவநல்லூரில் அங்கன்வாடிக் கட்டிடம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்!

நாகை, மே 15-

நாகை மாவட்டம் நாகை ஒன்றியம், ஐவநல்லூரில் அங்கன்வாடி கட்டிடம், அந்தனைபோட்டை ஊராட்சியில் நியாய விலை கடை, ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், ஆழியூர் ஊராட்சியில் ஊராட்சி மன்ற கட்டிடம் என ரூ. 72.42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் அ.அருண்தம்புராஜ் தலைமைத் தாங்கினார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன், நாகை சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷாநவாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தார். வட்டார ஆத்மா குழு தலைவர் சிக்கல் என். ஆனந்த் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை மற்றும் முன்னாள் படை வீரர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு நாகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஐவநல்லூர் ஊராட்சி சவேரியார் கோயில் தெருவில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் 15 வது மானிய நிதியின் கீழ் ரூ. 11.62லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டடம், அந்தணப்பேட்டை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ. 14.59 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டடப்பட்டுள்ள நியாய விலைக் கடை மற்றும் ராஷ்டிய கிராம சுவராஜ் அபியான் திட்டத்தின் கீழ் ரூ. 23.56 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் மற்றும் ஆழியூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ. 22.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் என மொத்தம் ரூ. 72,42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் மாநில சுற்றுசூழல் அணி துணைச் செயலாளரும், தொகுதி பொறுப்பாளருமான ரஞ்சன்துரை, ஒன்றியக் குழு தலைவர் வி.அனுசியா, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சரபோஜி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மீ.செல்வகுமார், மற்றும் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் முன்னாள் படை வீரர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் பொது மக்களின் நலனை கருதி மகளிருக்கு இலவச பேருந்து பயணம், மக்களைத் தோடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, போன்ற பல்வேறு நல்ல பல திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். வருகின்ற செப்டம்பர் 15ம் தேதி 1 கோடி குடும்பங்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் செயல்படுத்த உள்ளார்கள். நாகை ஒன்றியத்தில் ஐவநல்லூர், அந்தணபேட்டை, ஆழியூர் ஊராட்சிகளில் நியாய விலை கடை, அங்கன்வாடி கட்டிடம், ஊராட்சி மன்ற கட்டிடம் என ரூ. 72.42 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் பேட்டியளித்தார்.

செய்தித் துறையின் கீழுள்ள

# நினைவகங்கள் - இல்லங்கள் - அருங்காட்சியகம்!

## தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு நேரில் பார்வையிட்டார்!

சென்னை, மே.15-

செய்தித் துறையின் கீழுள்ள நினைவகங்கள் மற்றும் தலைவர்களின் இல்லங்களை தலைமைச் செயலாளர் முனைவர். வெ.இறையன்பு ஆய்வு மேற்கொண்டார்.


தலைமைச் செயலாளர் முனைவர். வெ.இறையன்பு நேற்று (14.05.2023) செய்தித் துறையின் கீழ் உள்ள சென்னை காந்தி மண்டபம் வளாகத்தில் அமைந்துள்ள இராஜாஜி நினைவிடம், காந்தி அருங்காட்சியகம் மற்றும் சிறையில் வ.உ.சிதம்பரனார் இழுத்த செக்கு பொலிவூட்டப் பட்டதையும், மார்பளவுச் சிலையையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து சுதந்திரப் போரட்ட வீரர்கள் அரங்கம், தமிழ்மொழித் தியாகிகள் அரங்கம், எம்.பக்தவத்சலம் நினைவிடம், இரட்டைமலை சீனிவாசன் நினைவிடம், பெருந்தலைவர் காமராஜர் நினைவிடம் ஆகியவற்றில் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் ரூ.2.48 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் அயோத்தி தாச பண்டிதர் நினைவு மண்டப கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். காந்தி மண்டப வளாகத்தில் அதிக அளவில் நமது மண்ணிற்கேற்ற நாட்டு மரக் கன்றுகளை நடவு செய்யுமாறு அறிவுத்தினார்.

பின்னர் பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம், கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் மணிமண்டபம், திருவல்லிக்கேணியில் உள்ள மகாகவி பாரதியார் நினைவு இல்லம் மற்றும் ராஜா அண்ணாமலை புரத்தில் உள்ள அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம் ஆகியவற்றைப் பார்வையிட்டு அரங்கங்கள் மற்றும் மணிமண்டபங்களை பொதுமக்கள் அதிக அளவில் பார்வையிட்டு செல்லும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றியடைய பாடுபடும் மாணவ மாணவியர் இதுபோன்ற அரங்கங்கள் மற்றும் மணிமண்டபங்களை பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யவும் செய்தித் துறை அலுவலர்களை கேட்டுக் கொண்டார். தலைவர்கள் வாழ்ந்த இல்லங்களை பழமை மாறாமல் புதுப்பிக்க வேண்டுமென்றும் பொதுப்பணித் துறை அலுவலர்களை தலைமைச் செயலாளர் முனைவர். வெ. இறையன்பு கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின் போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், கூடுதல் இயக்குநர் (செய்தி) சிவ. சு.சரவணன், இணை இயக்குநர் (நினைவகங்கள்) கு. தமிழ்செல்வராஜன், முதன்மை தலைமை பொறியாளர் (கட்டடம்) கே.பி. சத்தியமூர்த்தி, தலைமை பொறியாளர் (சென்னை மண்டலம்) கே.ஆயத்தரசு ராஜசேகரன், செயற்பொறியாளர் இ.ஜெயக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கண்ணீர் அஞ்சலி...

புதுக்கோட்டை வடக்கு
மாவட்ட கழகச் செயலாளர்

K.K.செல்லபாண்டியன் M.Com.,BL.,
அவர்களின் தகப்பனார்

S.கண்ணன் ஆசிரியர் (ஓய்வு)

அவர்கள் 13.05.2023 அன்று இயற்கை எய்தினார் அன்னாரின் இறுதி ஊர்வலம் நல்லடக்கம் 15.05.2023 காலை 10 மணியளவில் கீரனூரில் உள்ள அவர்களது இல்லத்தில் இருந்து நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அனைத்து ஒன்றிய,நகர மற்றும் பேரூர் கழகம்
புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்